# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.38/2020

நாள்: 27.04.2026

பி.வா.சா. 1 – செல்வராணி

2026–ம் ஆண்டு ஏப்ரல் 27–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் மாமனார் பெயர் கலியபெருமாள். மாமியார் பெயர் மலர்கொடி. கலியபெருமாள், மலர்கொடிக்கு சிவசங்கரி மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் வாரிசுகள். சிவசங்கரி தான் வாதி என்றால் சரிதான். கார்த்திகேயன் இறந்துவிட்டார். அவருடைய மனைவி தான் நான். 2ம் பிரதிவாதி என்னுடைய மகள். வழக்கு சொத்துகளை பொறுத்து எனது மாமனார் காலத்திலோ, தற்போதோ பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. தாவா 1 முதல் 8 அயிட்ட சொத்துகள் குடும்பத்தின் பாகத்தின் மூலம் கிடைத்த சொத்துகள் என்றால் சரிதான். எனது மாமனாரின் தந்தை பெயர் கோவிந்தராஜ். கோவிந்தராஜின் மனைவி பெயர் அஞ்சலை. அவர்களுக்கு கலியபெருமாள், சின்னதுரை, இந்த்ராணி, ராஜேந்திரன், தமிழரசி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். கோவிந்தராஜ் உயிருடன் இருக்கும்போதே கலியபெருமாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கோவிந்தராஜ், கலியபெருமாள் மகன் கார்த்திகேயன், சின்னதுரை மற்றும் ராஜேந்திரன் பொதுக்குடும்ப சொத்துகளை பொறுத்து கடந்த 29.03.2007–ல் பதிவான பாகப்பத்திரத்தின் மூலம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தில் உள்ள பூர்வீக சொத்துகள் தான் தாவா 1 முதல் 8 அயிட்ட

சொத்துகள் என்றால் சரிதான். பாகப்பத்திரத்தில் மேற்படி சொத்துகள் பி அட்டவணை சொத்துகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9 முதல் 15 அயிட்ட சொத்துகள் 1 முதல் 8 அயிட்ட சொத்துகளின் வருமானம் மூலம் வாங்கப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. என் கணவர் கிரையம் வாங்கியது. 9, 10 மற்றும் 11 அயிட்ட சொத்துகளை கிரயம் வாங்கிய காலத்தில் என் கணவர் மைனர் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதியை கார்டியனாக காட்டி தான் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 12 மற்றும் 14 வது அயிட்ட சொத்து என் கணவர் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கவில்லை என்றாலும் பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அசல் பத்திரம் வாதியிடம் உள்ளது என்றால் சரிதான். 13 வது அயிட்ட சொத்து என் கணவரின் தந்தை கலியபெருமாள் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கவில்லை என்றாலும் பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அசல் பத்திரம் வாதியிடம் உள்ளது என்றால் சரிதான். 15 வது அயிட்ட சொத்து என் பெயரில் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கவில்லை என்றாலும் பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது என்னுடைய வருமானத்தில் வாங்கப்பட்டது. அதன் அசல் பத்திரம் வாதியிடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அசல் கிரய பத்திரங்கள் எப்படி வாதியிடம் சென்றது என்றால் என் கணவர் இறந்தபோது பீரோ சாவியை என்னிடம் இருந்து வாங்கிச் சென்று என்னுடைய மாமியார் மற்றும் என் கொழுந்தனார் ஆகியோர் பிரோவில் இருந்த அசல் பத்திரங்களை எடுத்து வாதியிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து

நெட்டிலக்குறிச்சி, ஆண்டிமடம் மற்றும் பெரம்பலூர் ஆகிய ஊர்களில் உள்ளது. அணிக்குறிச்சான், விளந்தை, சிறுவாச்சூர் ஆகிய ஊரில் சொத்து உள்ளது என்றால் சரிதான். 2, 3, 4, 11, 13 அயிட்ட சொத்துகள் நஞ்சை நிலம் என்றால் தெரியாது. 1, 5 முதல் 10 மற்றும் 12 அயிட்ட சொத்துகள் புஞ்சை நிலம் என்றால் தெரியாது.15, 16 அயிட்ட சொத்துகள் காலி மனை என்றாலும் வீடு இல்லை என்றாலும் சரிதான். தாவா சொத்துகளை என் கணவர் தான் அனுபவம் செய்துவந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருக்களப்பூர் கிராமத்தில் உள்ள சர்வே எண்.331/1 பி 32.5 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.331/9 சி 19.5 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.331/7 15.5 ஏர்ஸ் மொத்தம் 1.45 ஏக்கர் நிலத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்துகளை சேர்க்க மனு செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு partial Partition படி பாதிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்கு பாகம் இல்லை என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் பொது குடும்ப சொத்துகள் என்றாலும் தாவா சொத்துகளில் வாதி கோரியபடி பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.